# பணமும் வங்கித் தொழிலும்

## பணநிரம்பல்

### பொதுவான போக்குகள்

வங்கித் தொழில்முறையின் வெளிநாட்டுச் சொத்துக்களிலும் (தேறிய) உள்நாட்டுக் கொடுகடனிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களின் முக்கிய காரணமாக விரிந்த பணநிரம்பலின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட விரைவான தொரு தன்மையே 1990 இன் நாணய அபிவிருத்தியில் காணப்பட்ட முக்கிய பண்பாக விளங்கியது. பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக் களையும் உள்ளடக்கியதான குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1989 இறுதியில் காணப்பட்ட 9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1990 இறுதியில் 13 சதவீதங் கொண்ட ஆண்டு வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்தது. எனினும் இவ்வாண்டுக் காலத்தில் $M_1$ இன் வளர்ச்சி பெருமளவு தளம்பல்களைப் பதிவு செய்து, ஆண்டு வளர்ச்சி வீதம் 1989 இறுதியின் 9 சதவீதத்திலிருந்து 1990 ஏப்பிறலில் 17 சதவீதத்திற்கு உயர்வடைந்ததெனினும் 1990 திசெம்பர் இறுதியில் 13 சத வீதத்தினால் அதிகரிப்பதற்கு முன்னர் ஒத்தோபர் இறுதியில் 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை $M_1$ ஐயும் வர்த்தக வங்கிகளில் பொதுமச்களால் வைத்திருக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கியதெனக் கருதப்படும் விரிந்த பணநிரம்பலின் ($M_2$) ஆண்டு வளர்ச்சி வீதம் இரண்டாண்டு களுக்குமிடையில் 12 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் $M_1$ இனைப்போலன்றி $M_2$ இன் ஆண்டு வளர்ச்சி வீதம் திசெம்பரில் 2 சத வீதப் புள்ளிகளால் விரிவடைந்து 1990 இறுதியில் 19 சதவீதத்தினை அடையு முன்னர் 1990 பெப்புருவரிக்கும் நவெம்பருக்குமிடையில் 15–17 சதவீத வீச்சிற் கிடையில் அமைந்திருந்தது.

நாணயத்தளம் (ஒதுக்குப்பணம் அல்லது உயர்வலு நாணயம்) 1990 இறுதி யில் ரூ. 315,790 இலட்சத்தினை அடைந்து முன்னைய ஆண்டின் ரூ. 12,270 இலட்சம் அல்லது 4.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 47,890 இலட்சம் அல்லது 17.9 சதவீதங் கொண்ட ஆண்டு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மூலப்பக்கத்தில் இவ்வதிகரிப்பிற்கு மத்திய வங்கியின் தேறிய வெளி நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட ரூ. 29,970 இலட்சங் கொண்ட பெருமளவு அதிகரிப்பே பெரும்பாலும் முழுக் காரணமாக இருந்தது. ஒப்பிடுகையில் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 17,920 இலட்சத்தினால் அதிகரித்தன. பயன்பாட்டுப் பக்கத்தில் அதிகரிப்புக்கள் மத்திய வங்கியின் நாணய வெளியீட்டிலும் (ரூ. 27,750 இலட்சம்), மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்களிலும் (ரூ. 20,140 இலட்சம்) ஏற்பட்ட அதிகரிப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டது.

**பணநிரம்பலும் ஏதுக்காரணிகளும்**

ஆண்டிற்காண்டு அடிப்படையில் குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1989 இன் ரூ. 29,590 இலட்சம் அல்லது 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 45,400 இலட்சம் அல்லது 13 சதவீதத்தினால் அதிகரித்தது. இது பொது மக்களின் நாணய உடைமைகளில் ஏற்பட்ட ரூ. 24,700 இலட்சம் அல்லது 13 சதவீத அதிகரிப்பினையும் கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 20,700 இலட்சம் அல்லது 13 சதவீத அதிகரிப்புக்களையும் உள்ளடக்கியிருந்தது. அதே வேளை போலி நாணயத்தின் வளர்ச்சி வீதம் இவ்வாண்டுக் காலத்தில் குறிப்பிடத் தக்களவில் விரிவடைந்து 1989 இன் ரூ. 55,280 இலட்சம் அல்லது 16 சதவீதங் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 100,440 இலட்சம் அல்லது 24 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதன் விளைவாக 1990 இல் விரிந்த பணநிரம்பல் ($M_2$) முன்னைய ஆண்டின் 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

ஏனைய தனியார்துறைக் கூறுகளின் (உண்மையான தனியார்துறை) தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 95,780 இலட்சம் அல்லது 27 சதவீதத் தினால் அதிகரித்தமையே 1990 இல் போலி நாணயம் விரிவடைவதற்கு முக்கிய பொறுப்பாக இருந்தது. முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 8,730 இலட்சம் அல்லது 17 சதவீதங் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 1990 இல் அரச கூட்டுத்தாபனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 4,340 இலட்சம் அல்லது 10 சதவீதத்தினாலும் கூட்டுறவு நிறுவனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ரூ. 320 இலட்சம் அல்லது 4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இவ்வாண்டுக் காலத்தில் போலி நாணயத்தில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சி ஓரளவிற்கு வர்த்தக வங்கிகளினால் வைப்புக்களின் மீது வழங்கப்பட்ட போட்டி ரீதியான வட்டி வீதங்களின் தாக்கத்திலும் ஓரளவிற்கு தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாகத் திரவ நிலைமையில் ஏற் பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திலும் பிரதிபலித்தது.

இவ்வாண்டில், உள்நாட்டுக் கொடுகடன், வங்கித்தொழில் முறையின் வெளி நாட்டுச் சொத்துக்கள் (தேறிய) ஆகிய இரண்டும் நாணயக் கூட்டுக்களின் மீது விரிவாக்கத் தாக்கத்தினை ஏற்படுத்தின. எனினும் அளவுகளின் நியதிகளில், உள்நாட்டுக் கொடுகடனின் வளர்ச்சி பெரும் செல்வாக்கினைக் கொண்டிருந்தது. 1990 இல் உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 175,430 இலட்சம் அல்லது 17 சதவீதங் கொண்ட விரிவாக்கம் 1989 இன் ரூ. 54,540 இலட்சம் அல்லது 6 சதவீதங் கொண்ட மிதமான அதிகரிப்புடன் ஒப்பிடற்பாலது.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.56

## நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும் 1988–1990

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1988 திசெம்பர் | 1989 திசெம்பர் | 1990 திசெம்பர் | மாற்றம் 1988/1989 | | மாற்றம் 1989/1990 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நாணயக்கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 18,487 | 19,650 | 22,120 | + 1,163 | + 6.3 | + 2,470 | + 12.6 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 13,892 | 15,688 | 17,758 | + 1,796 | + 12.9 | + 2,070 | + 13.2 |
| குறுகிய பண நிரம்பல் (M[1]) ... | 32,379 | 35,338 | 39,878 | + 2,959 | + 9.1 | + 4,540 | + 12.8 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 35,567 | 41,095 | 51,139 | + 5,528 | + 15.5 | + 10,044 | + 24.4 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 743 | 895 | 927 | + 152 | + 20.5 | + 32 | + 3.6 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 5,103 | 4,230 | 4,664 | — 873 | — 17.1 | + 434 | + 10.3 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) ... | 29,721 | 35,970 | 45,548 | + 6,249 | + 21.0 | + 9,578 | + 26.6 |
| **விரிந்த பணநிரம்பல் (M2)** ... | 67,946 | 76,433 | 91,017 | + 8,487 | + 12.5 | + 14,584 | + 19.1 |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 96,867 | 102,321 | 119,864 | + 5,454 | + 5.6 | + 17,543 | + 17.1 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 36,065 | 36,119 | 39,197 | + 54 | + 0.1 | + 3,078 | + 8.5 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 44,311 | 44,740 | 52,524 | + 429 | + 1.0 | + 7,784 | + 17.4 |
| மத்திய வங்கியால் ... | 36,439 | 36,741 | 38,206 | + 302 | + 0.8 | + 1,465 | + 4.0 |
| வர்த்தக வங்கிகளால் ... | 7,872 | 7,999 | 14,318 | + 127 | + 1.6 | + 6,319 | + 79.0 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 8,246 | — 8,621 | — 13,327 | — 375 | 4.5 | — 4,706 | + 54.6 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 60,802 | 66,202 | 80,667 | + 5,400 | + 8.9 | + 14,465 | + 21.8 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,318 | 1,178 | 1,596 | — 140 | — 10.6 | + 418 | + 35.5 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 10,787 | 13,862 | 15,636 | + 3,075 | + 28.5 | + 1,774 | + 12.8 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 48,697 | 51,162 | 63,435 | + 2,465 | + 5.1 | + 12,273 | + 24.0 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 7,058 | 4,732 | 10,206 | — 2,326 | — 33.0 | + 5,474 | + 115.7 |
| 2.1 மத்திய வங்கி (தேறிய) ... | 4,326 | 1,678 | 4,675 | — 2,648 | — 61.2 | + 2,997 | + 178.6 |
| 2.2 வர்த்தக வங்கிகள் (தேறிய) ... | 2,732 | 3,054 | 5,531 | + 322 | + 11.8 | + 2,477 | + 81.1 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | — 35,979 | — 30,620 | — 39,053 | + 5,359 | — 14.9 | — 8,433 | + 27.5 |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 15,541 | — 13,176 | — 15,039 | + 2,365 | — | — 1,863 | — |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 20,038 | — 19,043 | — 24,968 | + 995 | — | — 5,925 | — |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | — 400 | 1,599 | 954 | + 1,999 | — | — 645 | — |
| **விரிந்த பண நிரம்பல் (M2)** ... | 67,946 | 76,433 | 91,017 | + 8,487 | + 12.5 | + 14,584 | + 19.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: அடையாளங்கள் M2 இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(அ) வதிவறறோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

## வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

ஆண்டு முழுவதும் உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு தனியார்துறையில், சிறப்பாக உண்மையான தனியார்துறையினரால் உயர்ந்த மட்டத்தில் கொடுகடன் பயன்படுத்தப்பட்டமையே பெருமளவிற்குக் காரண மாகும். எனினும், வங்கித் தொழில் துறையிலிருந்து சிறப்பாக 1990 ஓகத்தி லிருந்து கிடைத்த அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கம் இவ்வாண்டுக் காலத்தில் உள்நாட்டுக் கொடுகடனின் மொத்த வளர்ச்சியை அதிகரிக்கச் செய்தது.

வைப்புக்களின் திரட்டல் ரூ. 47,060 இலட்சமாகக் காணப்பட்டபோதும் 1990 இல் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 30,780 இலட்சம் அல்லது 9 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு ஆண்டின் இறுதி மாதங்களில் வங்கிக் கொடுகடன் விரைவாகப் பயன்படுத்தப்பட்டமையே காரணமாக இருந்தது. வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 51,240 இலட்சத் தினால் அதிகரித்தமையும் அனுமதிப்பங்கு உட்பட பன்னாட்டு நாணய நிதியத் திற்கான பொறுப்புக்களின் மீள் மதிப்பீட்டுச் சீராக்கத்தின் விளைவாகத் தோன் றிய சிறப்புக் கடனான ரூ. 30,550 இலட்சத்தை உள்ளடக்கிய மத்திய வங்கியி லிருந்தான தற்காலிக முற்பணங்கள் ரூ. 35,630 இலட்சத்தினால் அதிகரித்தமை யும் அரசிற்கான மொத்தக் கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முக்கிய பொறுப்பாக இருந்தன. எனினும் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட விடயம் இவ் வாண்டின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளுக்கு நேரடியான காரணமாக அமையாமையினால் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளின் காரணமாக அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சி மிகச் சிறிய அளவாகவே இருந்தது.

தனியார்துறைக் கொடுகடனின் மீது பகுதியளவான கொடுகடன் உச்ச எல்லைத் தொழிற்பாடு காணப்பட்டபோதும், 1990 இல் தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடன் 1989 இன் ரூ. 54,000 இலட்சம் அல்லது 9 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 144,650 இலட்சத்தினால் அல்லது 22 சதவீதத்தினால் உயர்வடைந்தது. வியாபாரச் சூழ்நிலைகளில் ஏற்பட்ட முன்னேற்றம்,சாதகமான வானிலை நிலைமைகள் என்பனவற்றினைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தமை, மின்வலு பெற்றோலிய விலை களில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தங்களின் விளைவாகத் தொழிற்படு மூல தனத்தின் தேவைகள் உயர்வடைந்தமை என்பன 1990 இல் தனியார்துறையின் உயர்ந்த கொடுகடன் கேள்விக்குப் பெருமளவிற்குப் பொறுப்பாக இருந்தன.

பகுத்துப் பார்க்கும்போது, ஆய்விற்குரிய ஆண்டில் தனியார்துறையின் அனைத்து மூன்று துணைத் தொகுதிகளினதும் கொடுகடன் பயன்பாடு உயர் வடைந்து காணப்பட்டது. 1990 இல் ஏனைய தனியார்துறைக் கூறுகளுக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் ரூ. 122,730 இலட்சத் தினால் அல்லது 24 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1989 இல் இது தொடர் பான வளர்ச்சி ரூ. 24,650 இலட்சம் அல்லது 5 சதவீதமாகக் காணப்பட்டது. அதேவேளை அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் ரூ. 17,740, இலட்சத்தினால் அல்லது 13 சதவீதத்தினால் விரிவடைந்தது. இது 1989இல் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பான ரூ. 30,750 இலட்சம் அல்லது 29 சதவீதத்திலும் பார்க்கக் குறைவானதாகும். கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பன முதன்மைக் கடன்பாட்டாளர்களாக விளங்கியதுடன் இத்தன்மை அவர்களின்

வெளிநின்ற கொடுகடன் மட்டங்களை முறையே ரூ. 12,240 இலட்சத்தினாலும், ரூ. 6,100 இலட்சத்தினாலும், ரூ. 2,370 இலட்சத்தினாலும் உயர்த்தின. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் அதிகரித்த கொடுகடன் பாவனை, முக்கியமாக இன்றியமையாத உணவு இறக்குமதிகளை நிதியிட்டமையாலும் தாங்கிருப்புக்களைப் பேணியமையாலும் ஏற்பட்டது. இந்த நடவடிக்கைகள் முன்னர் உணவு ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. 1989 இல் ரூ. 1,400 இலட்சம் அல்லது 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த கூட்டுறவுத் துறைக்கான வங்கிக் கொடுகடன் 1990 இல் ரூ. 4,190 இலட்சத்தினால் அல்லது 36 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு வேளாண்மைப் பண்டங்களின் கொள்வனவிற்கான உயர்வடைந்த கொடுகடன் கேள்வி, அதேபோன்று வேளாண்மை உள்ளீடுகள் குறிப்பாக 1990 இல் வளமாக்கி உதவுதொகை அகற்றப்பட்டதைத் தொடர்ந்து வளமாக்கியின் கொள்வனவிற்கான அதிகரித்த கொடுகடன் தேவைகள் என்பனவே முக்கிய காரணங்களாக அமைந்தன.

அதேவேளை 1990 இல் வங்கித்தொழில் முறைமயின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1989 இல் காணப்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தன. எல்லாமாகத் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1989 இன் ரூ. 23,260 இலட்சம் அல்லது 33 சதவீதங் கொண்ட வீழ்ச்சிக்கு எதிராக 1990 இல் ரூ. 54,740 இலட்சத்தினால் அல்லது 116 சதவீதத்தினால் அதிகரித்தன. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் ரூ. 29,960 இலட்சம் அல்லது 179 சதவீதத்தால் அதிகரித்த மத்திய வங்கியின் சொத்துக்களிலும், ரூ. 24,780 இலட்சம் அல்லது 81 சதவீதத்தினால் அதிகரித்த வர்த்தக வங்கிகளின் சொத்துக்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களை உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டிலுள்ள காசு நிலுவைகளிலும், வெளிநாட்டு அரச பிணைகள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலும் முறையே ஏற்பட்ட ரூ. 40,160 இலட்சம், ரூ. 28,560 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்கள், வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட ரூ. 26,310 இலட்ச வீழ்ச்சியுடன் இணைந்து மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் விரிவடைவதற்கான முக்கிய உதவு காரணிகளாக விளங்கின. எனினும் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட இவ்வதிகரிப்புக்களின் தாக்கம் பன்னாட்டு அமைப்புக்களின் வைப்புக்கள் ரூ. 60,690 இலட்சத்தினால் அதிகரித்தமையின் மூலம் கணிசமானளவிற்குத் தணிக்கப்பட்டது. அதேவேளை இவ்வாண்டுக் காலத்தில் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட உயர்ச்சி, வெளிநாட்டு வங்கிகளுடனான காசு, வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் வசமிருந்த பணம் என்பனவற்றில் முறையே ஏற்பட்ட ரூ. 11,460 இலட்சம், ரூ. 34,180 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களில் முக்கியமாகப் பிரதிபலித்ததுடன் வெளிநாட்டுச் செலாவணிப் பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூ. 27,360 இலட்சங் கொண்ட அதிகரிப்பினால் இது ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. கொடுகடன் தொடர்களின் அதிகரித்த கிடைப்பனவுடன் இணைந்து காணப்பட்ட சாதகமான சென்மதி நிலுவைச் செயலாற்றம் இவ்வாண்டுக் காலத்தில் வங்கித் தொழில் முறையில் வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரித்த ஒன்றுதிரட்டலை இயலச் செய்தது.

## வர்த்தக வங்கித் தொழில்

### பொதுவான போக்குகள்

வர்த்தக வங்கிகளின் பொதுவான திரவ நிலைமை ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் முன்னேற்றமடைந்தது. கேள்வி வைப்புகளுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1989 இறுதியின் 130.7 சதவீதத்திலிருந்து 1990 இறுதியில் 149.1 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இது கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட

அட்டவணை 1. 57

**வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் 1989—1990**

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயங்கள் | மாதாந்த எண் தொகைகளின் சராசரி | | காலப்பகுதி முடிவில் | |
|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1989 | 1990 |
| கையிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நிதிய ஒதுக்குத் தேவைகளும் உட்பட) | 6,828 | 7,649 | 7,611 | 9,406 |
| வெளிநாட்டு நிலுவைகள் .. | 7,994 | 9,201 | 7,607 | 12,077 |
| திறைசேரி உண்டியல்கள் .. | 5,289 | 8,893 | 6,113 | 11,237 |
| கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் .. | 6,112 | 6,579 | 6,703 | 7,368 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் .. | 26,205 | 32,289 | 28,010 | 40,089 |
| மொத்த முதலீடுகள் (அ) .. | 1,823 | 2,012 | 1,961 | 2,040 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் .. | 56,083 | 67,165 | 60,128 | 74,274 |
| கேள்வி வைப்புக்கள் (ஆ) .. | 18,343 | 22,529 | 21,439 | 26,880 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும (இ) .. | 46,115 | 56,295 | 50,256 | 63,664 |
| மொத்த வைப்புக்கள் .. | 64,458 | 78,823 | 71,695 | 90,544 |
| | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் .. | 37.2 | 34.0 | 35.5 | 35.0 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் | 10.6 | 9.7 | 10.6 | 10.4 |
| மொத்த வைப்புக்களுக்கு வெளிநாட்டு நிலுவைகளின் விகிதம் .. | 12.4 | 11.7 | 10.6 | 13.3 |
| மொத்த வைப்புக்களுக்கு திறைசேரி உண்டியல்களின் விகிதம் | 8.2 | 11.3 | 8.5 | 12.4 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் | 9.5 | 8.3 | 9.3 | 8.1 |
| கேள்வி வைப்புக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் | 142.9 | 143.3 | 130.6 | 149.1 |
| மொத்த வைப்புகளுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் .. | 40.7 | 41.0 | 39.1 | 44.3 |
| மொத்த வைப்புகளுக்கு முதலீட்டின் விகிதம் | 2.8 | 2.6 | 2.7 | 2.3 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் .. | 87.0 | 85.2 | 83.9 | 82.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) அரச, அரச உத்தரவாதப் பிணைகளும், தனியார் பிணைகளும்.

(ஆ) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ளவைப்புக்கள் நீங்கலாக.

(இ) சிறப்பு சேமிப்பு திட்டங்களின் கீழ் அரச வங்கிகளினால் 1989ஆம் ஆண்டிலும் 1990ஆம் ஆண்டிலும் நீண்ட தவணை வைப்புக்களாக முறையே திரட்டப்பட்ட பணத்தின் தொகையான ரூ. 17,080 இலட்சத்தையும் ரூ 19,640 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு: இங்கு கொடுக்கப்பட்ட எண் தொகைகளுக்கும் இவ்வறிக்கையில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்ட அதே எண் தொகைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் வரைவிலக்கண வேறுபாட்டினால் ஏற்பட்டவையாகும்.

ரூ. 54,410 இலட்சங் கொண்ட அதிகரிப்பிற்கெதிராக திரவச் சொத்துக்கள் ரூ. 120,790 இலட்சத்தினால் மிக விரைவாக வளர்ச்சியுற்றமையின் விளைவே யாகும். திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் ரூ. 51,240 இலட்சத்தினால் அல்லது 84 சதவீதத்தினால் அதிகரித்த வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் உடைமைகளிலும் ரூ. 44,700 இலட்சம் அல்லது 58 சதவீதத்தினால் அதிகரித்த கையிலுள்ள வெளிநாட்டு நாணயம், வெளிநாட்டு வங்கியிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் என்பனவற்றிலும் முக்கியமாகப் பிரதிபலித்தது. அத்துடன் மத்திய வங்கியிலிருந்து வரவேண்டிய காசு, கையிலுள்ள பணம், கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் என்பன முறையே ரூ. 14,970 இலட்சத்தினாலும், ரூ. 2,990 இலட்சத்தினாலும், ரூ. 6,650 இலட்சத்தினாலும் அதிகரித்தன.

1990 இல் வங்கித்தொழில் முறையின் பொதுவான திரவ நிலைமை முன்னேற்றம் கண்டபோதும் அழைப்புச் சந்தையில் கடன்பாடுகள்/கடன் வழங்கல்கள், சிறப்பாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் அதிகரித்த போக்கினைக் காட்டின. இதற்கு, பற்றாக்குறை வங்கிகளுக்கு ஏற்பட்ட குறுங்கால நிதிகளுக்கான உயர்ந்த கேள்வியும், அதேபோன்று குறிப்பிட்ட வங்கிகளுக்கு எப்பொழுதேனும் ஏற்படும் பெருமளவிலான திரவ மூலவளங்களுக்கான தேவையும் பெருமளவிற்குக் காரணமாகும். எனினும் அழைப்புப்பணச் சந்தையில் கடன்பாடுகள்/கடன் வழங்கல்கள் 1990 இன் இறுதிக் காலாண்டில், வீழ்ச்சியினைக் காட்டின. இதனைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அழைப்புப்பணச் சந்தை வீதங்கள் ஒகத்தில் 19—30 சதவீத உச்ச வீச்சுக்களிலிருந்து 1990 இறுதியில் 14—19 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

அதேவேளை பொருளாதார நடவடிக்கையின் அதிகரித்த மட்டம், தொடர்ச்சியான உயர்ந்தவீத பணவீக்கம், மின்வலுத் தீர்வையிலும், எரிபொருள் விலைகளிலும் செய்யப்பட்ட மேல்நோக்கியத் திருத்தங்களைத் தொடர்ந்து உயர்வடைந்த தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகள் என்பனவற்றைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற கடன் வழங்கல்கள் சிறப்பாக ஆண்டின் இறுதிக் காலாண்டில் மிகக் கூடுதலாக விரிவடைந்தன. 1990 இல் தனியார்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் எல்லாமாக ரூ. 144,650 இலட்சத்தினால் அல்லது 22 சதவீதத்தினால் விரிவடைந்த வேளையில் ஆண்டின் இறுதிக் காலாண்டில் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 59,610 இலட்சமாக அல்லது ஆண்டிற்கான மொத்த அதிகரிப்பில் 41 சதவீதமாக விளங்கியது.

**வங்கிச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பும் தனியார்துறைக்கான முற்பணங்களும்**

வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் (எதிரீட்டு விடயங்கள் நீங்கலாக) முன்னைய ஆண்டின் ரூ. 105,370 இலட்சம் அல்லது 11 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 260,120 இலட்சத்தினால் அல்லது 24 சதவீதத்தினால் அதிகரித்தன. பொறுப்புக்கள் பக்கத்தில் வைப்புக்கள் ரூ. 185,990 இலட்சம் அல்லது 26 சதவீதத்தினால் உயர்வடைந்து தவணை, சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 131,520 இலட்சம் அல்லது 27 சதவீத அதிகரிப்பினையும் கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 54,460 இலட்சம் அல்லது 26 சதவீத அதிகரிப்புக்களையும் உள்ளடக்கியிருந்தன. இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டுக் கடன்பாடுகள் ரூ. 240

## அட்டவணை 1. 58

### நோக்கங்களின்படியும் முதிர்ச்சிக் காலங்களின்படியும் வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள்* 1989 — 1990

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | | குறுங்காலம் (1 ஆண்டிற்கு குறைவான) | | நடுத்தரக்காலம் (1 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை) | | நீண்டகாலம் (5 ஆண்டுகளுக்கு மேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) (7) இன் % (1) | (3) | (4) (7) இன் % (3) | (5) | (6) (7) இன் % (5) | (7) | (8) மொத்தத்தின் சதவீதமாக (7) |
| **அ. வர்த்தகம்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 26,575.5 | 83.2 | 3,512.0 | 11.0 | 1,836.7 | 5.8 | 31,924.2 | 47.8 |
| மாச்சு | 1990 | 28,017.2 | 83.6 | 3,708.5 | 11.1 | 1,798.2 | 5.4 | 33,523.9 | 48.9 |
| யூன் | 1990 | 28,597.4 | 84.3 | 3,489.5 | 10.3 | 1,818.3 | 5.4 | 33,905.2 | 48.1 |
| செத்தெம்பர் | 1990 | 30,643.7 | 82.1 | 4,846.2 | 13.0 | 1,81[illegible].2 | 4.9 | 37,306.1 | 49.4 |
| **ஆ. நிதியிடல்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 813.1 | 48.6 | 573.4 | 34.2 | 288.0 | 17.2 | 1,674.5 | 2.5 |
| மாச்சு | 1990 | 894.9 | 50.1 | 641.1 | 35.9 | 250.6 | 14.0 | 1,786.6 | 2.6 |
| யூன் | 1990 | 1,051.8 | 54.5 | 616.4 | 31.9 | 263.2 | 13.6 | 1,931.4 | 2.7 |
| செத்தெம்பர் | 1990 | 1,159.9 | 61.2 | 439.1 | 23.2 | 296.1 | 15.6 | 1,895.1 | 2.5 |
| **இ. வேளாண்மை** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 3,042.8 | 46.2 | 906.3 | 13.8 | 2,632.3 | 40.0 | 6,581.4 | 9.9 |
| மாச்சு | 1990 | 3,541.4 | 50.6 | 1,034.8 | 14.8 | 2,422.4 | 34.6 | 6,998.6 | 10.2 |
| யூன் | 1990 | 3,103.4 | 46.3 | 1,095.0 | 16.3 | 2,499.1 | 37.3 | 6,697.5 | 9.5 |
| செத்தெம்பர் | 1990 | 3,170.0 | 45.4 | 1,209.7 | 17.3 | 2,607.9 | 37.3 | 6,987.6 | 9.3 |
| **ஈ. கைத்தொழில்**** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 11,991.1 | 75.0 | 2,432.0 | 15.2 | 1,557.0 | 9.7 | 15,980.1 | 23.9 |
| மாச்சு | 1990 | 10,558.8 | 71.7 | 2,629.1 | 17.9 | 1,531.7 | 10.4 | 14,719.6 | 21.5 |
| யூன் | 1990 | 11,136.1 | 71.5 | 2,830.7 | 18.2 | 1,604.1 | 10.3 | 15,570.9 | 22.1 |
| செத்தெம்பர் | 1990 | 10,770.8 | 67.8 | 3,101.1 | 19.5 | 2,015.7 | 12.7 | 15,887.6 | 21.1 |
| **உ. சுற்றுலா** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 294.9 | 40.0 | 90.1 | 12.2 | 352.0 | 47.8 | 737.0 | 1.1 |
| மாச்சு | 1990 | 293.3 | 39.5 | 90.5 | 12.2 | 357.8 | 48.2 | 741.6 | 1.1 |
| யூன் | 1990 | 299.0 | 39.1 | 84.9 | 11.1 | 381.5 | 49.8 | 765.4 | 1.1 |
| செத்தெம்பர் | 1990 | 339.6 | 43.0 | 80.5 | 10.2 | 369.6 | 46.8 | 789.7 | 1.0 |
| **ஊ. வீடமைப்பு** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 1,110.9 | 18.3 | 1,332.4 | 22.0 | 3,623.6 | 59.7 | 6,066.9 | 9.1 |
| மாச்சு | 1990 | 1,246.4 | 18.9 | 1,389.2 | 21.1 | 3,954.8 | 60.0 | 6,590.4 | 9.6 |
| யூன் | 1990 | 1,240.9 | 17.8 | 1,526.8 | 21.9 | 4,200.1 | 60.3 | 6,967.8 | 9.9 |
| செத்தெம்பர் | 1990 | 1,309.6 | 17.2 | 1,700.8 | 22.4 | 4,591.6 | 60.4 | 7,602.0 | 10.1 |
| **எ. நுகர்வு** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 970.8 | 63.8 | 431.1 | 28.3 | 120.7 | 7.9 | 1,522.6 | 2.3 |
| மாச்சு | 1990 | 1,026.0 | 62.8 | 475.0 | 29.1 | 132.0 | 8.1 | 1,633.0 | 2.4 |
| யூன் | 1990 | 1,173.2 | 62.4 | 565.0 | 30.1 | 141.4 | 7.5 | 1,879.6 | 2.7 |
| செத்தெம்பர் | 1990 | 1,147.9 | 60.1 | 583.0 | 30.5 | 180.5 | 9.4 | 1,911.4 | 2.5 |
| **ஏ. ஏனைய கடன்கள்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 902.8 | 40.1 | 721.6 | 32.0 | 627.4 | 27.9 | 2,251.8 | 3.4 |
| மாச்சு | 1990 | 1,092.4 | 42.9 | 777.8 | 30.5 | 678.6 | 26.6 | 2,548.8 | 3.7 |
| யூன் | 1990 | 1,323.0 | 47.3 | 714.4 | 25.6 | 757.4 | 27.1 | 2,794.8 | 4.0 |
| செத்தெம்பர் | 1990 | 1,310.0 | 42.4 | 874.9 | 28.3 | 906.0 | 29.3 | 3,090.9 | 4.1 |
| **ஐ. மொத்தம்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1989 | 45,701.9 | 68.5 | 9,998.9 | 15.0 | 11,037.7 | 16.5 | 66,738.5 | 100.0 |
| மாச்சு | 1990 | 46,670.4 | 68.1 | 10,746.0 | 15.7 | 11,126.1 | 16.2 | 68,542.5 | 100.0 |
| யூன் | 1990 | 47,924.8 | 68.0 | 10,922.7 | 15.5 | 11,665.1 | 16.5 | 70,512.6 | 100.0 |
| செத்தெம்பர் | 1990 | 49,851.5 | 66.1 | 12,835.3 | 17.0 | 12,783.6 | 16.9 | 75,470.4 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* முற்பணங்கள் சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி ஏனைய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்

** பொறியியல், கட்டிட வர்த்தகம், சுரங்கம் அகழ்தல், கடற்றொழில் ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கும்

இலட்சத்தினால் அல்லது 2 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றவேளையில் உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகள் ரூ. 32,530 இலட்சத்தினால் அல்லது 60 சதவீதத்தினால் அதிகரித்தன. 1990 இல் வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் ரூ. 28,890 இலட்சம் அல்லது 12 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்குச் சேகரிப்புக்காக அனுப்பப்பட்ட காசோலைகளின் விளைவாக தொங்கற் கணக்குகள் விரிவடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

சொத்துக்கள் பக்கத்தில் கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டு மீள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் என்பன ரூ. 148,110 இலட்சம் அல்லது 22 சதவீதத்தினால் உயர்வடைந்தன. கடன்கள் ரூ. 115,000 இலட்சம் அல்லது 29 சதவீதத்தினாலும் மேலதிகப் பற்றுக்கள் ரூ. 26,450 இலட்சம் அல்லது 13 சதவீதத்தினாலும் கொள்வனவு செய்யப்பட்டு கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ரூ. 6,660 இலட்சம் அல்லது 10 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை கையிலுள்ள பணம், மத்திய வங்கியுடனான வைப்புக்கள், வெளிநாட்டு நிலுவைகள்,. திறைசேரி உண்டியல்கள், கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த திரவச் சொத்துக்கள் ரூ. 120,550 இலட்சம் அல்லது 43 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இவ்வதிகரிப்பில் திறைசேரி உண்டியல் உடமைகள் மற்றும் வெளிநாட்டு நிலுவைகள் என்பன முறையே ரூ. 44,700 இலட்சம் அல்லது 59 சதவீதத்திற்கும் ரூ. 51,240 இலட்சம் அல்லது 84 சதவீதத்திற்கும் வகை கூறின.

தனியார்துறைக்கான மொத்த வர்த்தக வங்கி முற்பணங்கள் 1989 இன் ரூ. 54,000 இலட்சம் அல்லது 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இல் ரூ. 144,650 இலட்சம் அல்லது 22 சதவீதத்தினால் உயர்வடைந்தன. மொத்த முற்பணங்களில் குறுங்கால முற்பணங்களின் பங்கு 1989 இறுதியின் 68 சதவீதத்திலிருந்து 1990 இன் மூன்றாம் காலாண்டின் இறுதியில் 66 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் நடுத்தரகால முற்பணங்களின் (1–5 ஆண்டுகள்) பங்கு இதே காலப் பகுதியில் 15 சதவீதத்திலிருந்து 17 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

ஏற்றுமதிகள், இறக்குமதிகள், மொத்த சில்லறை வர்த்தகம் (தனியொரு பெரும் வகை) என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தக நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மொத்த முற்பணங்களின் பங்கு 1989 இறுதியின் 48 சதவீதத்திலிருந்து 1990 இன் மூன்றாம் காலாண்டு இறுதியில் 49 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகளில் பிரதிபலிக்கப்பட்டது.

கைத்தொழில் (பொறியியல், கட்டட வர்த்தகம், சுரங்கமகழ்தல், மீன்பிடி) கொடுகடனுக்கான கேள்வி 1989 இன் ரூ. 8,170 இலட்சம் அல்லது 6 சதவீதங் கொண்ட வீழ்ச்சிக்கு எதிராக 1990 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் ரூ. 930 இலட்சத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை வேளாண்மை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் பங்கு 1990 இன் மூன்றாம் காலாண்டின் இறுதியில் 9 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும் முழுமையான நியதிகளில் மொத்த வேளாண்மை முற்பணங்கள் 1989 இன் ரூ. 1,320 இலட்சம் அல்லது 2.3 சதவீதங் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1990 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் ரூ. 4,060 இலட்சத்தினால் அல்லது 6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

## நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்

கடந்தகாலப் போக்குகளுக்கு மாறாக, ஏனைய உள்நாட்டுத் தனியார்துறை 1990 இல் ரூ. 14,030 இலட்சங் கொண்ட தொகையைப் பயன்படுத்தி வர்த்தக வங்கி நிதியத்தின் முக்கிய தேறிய பயன்பாட்டாளராக விளங்கியது. முன்னைய ஆண்டில் இத்துறை தேறிய அடிப்படையில் வர்த்தக வங்கிகளுக்கான நிதிகளின் முக்கிய மூலமாக விளங்கியது. இம்மாற்றத்திற்கு முக்கியமாக, வைப்புக்களில் ஏற்பட்ட குறைந்தளவு அதிகரிப்பிற்கு எதிராக (ரூ. 108,690 இலட்சம்), கடன்கள் (ரூ. 84,890 இலட்சம்), மேலதிகப் பற்றுக்கள் (ரூ. 33,170 இலட்சம்) என்பனவற்றில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புக்களே முக்கிய காரணமாக இருந்தன. இதேபோன்று தேறிய அடிப்படையில் அரசதுறையும் ரூ. 24,480 இலட்சத்தினைப் பெற்று வர்த்தக வங்கிகளினது நிதியத்தின் பயன்பாட்டாளராக மாறியது. இதற்கு வர்த்தக வங்கிகளுடனான அரச பத்திரங்கள் ரூ. 52,550 இலட்சத்திற்கு அதிகரித்தமையும் அரச வைப்புக்களில் ரூ. 38,710 இலட்சங் கொண்ட குறைந்தளவு வளர்ச்சி காணப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். அத்துடன் இவ்வாண்டில் அரசின் குறுங்காலக் கொடுகடன் பயன்பாடு ரூ. 9,770 இலட்சமளவிற்கு அதிகரித்துக் காணப்பட்டது.

அத்துடன், வெளிநாட்டுத்துறையும் தேறிய அடிப்படையில், வர்த்தக வங்கி களினது நிதியத்தின் முக்கிய பயன்பாட்டாளராக மாறியுள்ளது. இத்துறை யினால் மொத்தமாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் தேறிய பயன்பாடு ரூ. 24,780 இலட்சமாக விளங்கியது. பயன்பாட்டுப் பக்கத்திலிருந்து நோக்குகை யில் ஏற்றுமதி உண்டியல்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நிலுவைகள் மற்றும் கடன்பாடுகள் முறையே ரூ. 52,140 இலட்சமாகவும், ரூ. 240 இலட்சமாகவும் விளங்கின. எனினும் இத்துறையின் உயர்வடைந்த வைப்புக்கள் ரூ. 27,600 இலட்சமாக விளங்கி இவ்வாண்டில் நிதிகளின் பாவனையைக் குறைவடையச் செய்தன.

அதேவேளை தேறிய அடிப்படையில் ஏனைய சொத்துக்களிலும் பொறுப்புக் களிலும் ஏற்பட்ட ரூ. 56,700 இலட்சம் கொண்ட வளர்ச்சி 1990 இல் வர்த்தக வங்கிகளின் மூலங்களைக் கட்டியெழுப்புவதற்கான நிதிகளின் முக்கிய மூலத்தினைக் கொண்டிருந்தது. தேறிய அடிப்படையில் ரூ. 13,060 இலட்சம் வரையிலான வர்த்தக வங்கி நிதிகளின் முக்கிய பயன்பாட்டாளராக இந்தவகை விளங்கிய 1989 இன் நிலைக்கு இது மாறானதாக இருந்தது.

1990 இறுதியில் வங்கித்தொழில் முறையினாலும் சேமிப்பு நிறுவனங்களி னாலும் திரட்டப்பட்ட மொத்த வைப்புக்கள் 1989 இறுதியின் ரூ. 709,660 இலட்சத்திலிருந்து ரூ. 866,420 இலட்சத்திற்கு விரிவடைந்து 22 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. உள்நாட்டு வர்த்தக வங்கிகள் மொத்த வைப்புக்களில் 58 சதவீதத்தினைத் திரட்டியவேளையில் வெளிநாட்டு வங்கிகளின் இது தொடர்பான பங்கு 13 சதவீதமாக இருந்தது. தேசிய சேமிப்பு வங்கி 1990 இல் திரட்டப்பட்ட மொத்த வைப்புக்களில் 25 சதவீதத்திற்கு வகை

# அட்டவணை 1.59

## வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் 1989 — 1990

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | | 1988/1989 இறுதி | | 1989/1990 இறுதி | |
|---|---|---|---|---|---|
| | | மூலங்கள் | பயன் பாடுகள் | மூலங்கள் | பயன் பாடுகள் |
| **1. அரசதுறை** | ... | **999.5** | — | — | **2,447.6** |
| அரச பிணைகளின் உடைமைகள் | ... | — | 1,332.6 | — | 5,255.0 |
| வைப்புக்கள் | ... | 1,127.1 | — | 3,871.4 | — |
| இறக்குமதி உண்டியல்கள் | ... | 170.1 | — | — | 87.5 |
| குறுந்தவணைக் கொடுகடன் | ... | 1,031.9 | — | — | 976.5 |
| மேலதிகப் பற்றுக்கள் | ... | 3.0 | — | — | — |
| **2. மத்திய வங்கி** | ... | — | **668.9** | 879.6 | — |
| கடன்பாடுகள் | ... | 139.4 | — | 2,675.3 | — |
| ஒதுக்குகள் | ... | — | 1,357.4 | — | 1,496.7 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் | ... | 143.7 | — | — | — |
| கையிலுள்ள காசு | ... | 405.4 | — | — | 299.0 |
| **3. அரச கூட்டுத்தாபனங்கள்** | ... | — | **3,621.9** | — | 483.9 |
| வைப்புக்கள் | ... | — | 546.2 | 1,290.2 | — |
| முற்பணங்கள் | ... | — | 3,075.7 | — | 1,774.1 |
| **4. கூட்டுறவுகள்** | ... | **233.7** | — | — | 359.7 |
| வைப்புக்கள் | ... | 92.8 | — | 58.8 | — |
| முற்பணங்கள் | ... | 140.9 | — | — | 418.5 |
| **5. ஏனைய உள்நாட்டு தனியார் துறை** | ... | **5,570.9** | — | — | 1,402.9 |
| வைப்புக்கள்* | ... | 8,036.1 | — | 10,869.2 | — |
| உள்நாட்டு உண்டியல்கள் | ... | 1,169.7 | — | — | 454.8 |
| இறக்குமதி உண்டியல்கள் | ... | 561.7 | — | — | 63.7 |
| மேலதிகப் பற்றுக்கள் | ... | — | 576.5 | — | 3,316.7 |
| கடன்கள் | ... | — | 3,601.2 | — | 8,488.8 |
| பிணைகளிலும் முறிகளிலும் முதலீடு | ... | — | 18.9 | 51.9 | — |
| **6. வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள்** | ... | — | **885.3** | 622.5 | — |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை | ... | — | 1,384.7 | 40.5 | — |
| உள்நாட்டு வங்கிகளுடனான வைப்புக்களும் கடன்பாடுகளும் | ... | 499.4 | — | 582.0 | — |
| | | | | — | 2,477.7 |
| **7. வெளிநாட்டுத் துறை** | ... | — | **321.6** | — | 24.1 |
| கடன்பாடுகள் | ... | 112.9 | — | | — |
| வைப்புக்கள் | ... | 1,443.3 | — | 2,760.3 | 5,213.9 |
| வெளிநாட்டு நிலுவைகள்—ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட | ... | — | 1,877.8 | — | — |
| **8. ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்** | | — | **1,306.4** | 5,669.7 | — |
| மூலதனமும் ஒதுக்குகளும் | ... | 620.7 | — | 1,295.8 | — |
| நிலையான, ஏனைய சொத்துக்கள் | ... | — | 939.0 | 1,740.7 | — |
| ஏனைய பொறுப்புக்கள் | ... | — | 988.1 | 2,633.2 | — |
| மொத்த தேறிய மூலங்கள்/பயன்பாடுகள் | ... | 6,804.1 | | 7,171.8 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறையிலும் அவற்றின் தேறிய மூலத்தை அல்லது தேறிய பயன்பாட்டைக் காட்டுகின்றன.

* சிறப்பு சேமிப்புத் திட்டத்தின்கீழ் இரு அரசு வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடங்கும்.

அட்டவணை 1.60

## சேமிப்புத் திரட்டல் 1986—1990

(ப. இ. ரூபாய்கள்)

| ஆண்டு | வர்த்தக வங்கிகள் | | | | பி. கி. அ. வங்கிகள் | | வர்த்தக வங்கிகள் அல்லாத்துறை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாடு | | வெளிநாடு | | | | கிராமிய வங்கிகள் | | தேசிய சேமிப்பு வங்கி | | வேளாண்மைப் பணி நிலையங்கள் | |
| | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான | சேமிப்பு | நிலையான (அ) | சேமிப்பு | நிலையான |
| 1986 ... | 11,127 | 14,341 | 1,084 | 7,322 | 16 | 5 | 1,122 | 174 | 4,326 | 9,875 | 111 | 38 |
| 1987 ... | 13,179 | 15,606 | 1,325 | 8,382 | 44 | 9 | 1,371 | 189 | 5,172 | 11,229 | 133 | 36 |
| 1988 ... | 16,240 | 15,476 | 1,731 | 8,371 | 90 | 14 | 1,713 | 195 | 6,381 | 11,684 | 146 | 34 |
| 1989 ... | 20,572 | 17,109 | 1,942 | 8,925 | 145 | 31 | 2,023 | 189 | 7,931 | 12,020 | 152 | 35 |
| 1990 ... | 25,347 | 25,099 | 1,965 | 9,289 | 269 | 45 | 2,241(இ) | 208(இ) | 8,408(ஆ) | 13,580(ஆ) | 169 (இ) | 22 (இ) |

(அ) ஏனைய வைப்புக்களையும் உள்ளடக்கும்.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 1990 செத்தெம்பர் 30இல் உள்ளவாறான நிலைமை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கூறியது. பகுத்துப் பார்க்கும்போது 1990 இறுதியில், மொத்த வைப்புக்களில் நிலையான வைப்புக்கள் 56 சதவீதத்தினைப் பெற்றிருந்து முன்னைய ஆண்டின் மட்டத்தினைவிட இரண்டு சதவீதப் புள்ளி கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இது சேமிப்பு வைப்புக்கள் மீதான குறைந்த வட்டிக்கு எதிராக நிலையான வைப்புக்கள் மீதான உயர்ந்த வட்டியின் பால் சேமிப்பாளர்கள் ஈர்க்கப்பட்டமையை ஓரளவுக்கு எடுத்துக் காட்டியது.

**வங்கித்தொழில் வசதிகளின் விரிவாக்கம்**

**கிளை விரிவாக்கம்**

வர்த்தக வங்கித்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 36 இற்கு அதிகரித்ததுடன் 1990 ஒத்தோபரில் பதுளை மாவட்டத்தில் 12 ஆவது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியும் நிறுவப்பட்டது. இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் (பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தவிர) எண்ணிக்கை இவ்வாண்டில் எவ்வித மாற்றமுமின்றி 24 ஆக விளங்கியது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1990 இல் கிளைகளின் நியதிகளில் அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களும் உயர்ந்த வீத விரிவாக்கத்தினைப் பதிவு செய்தன. (அட்டவணை 1.61) ஆண்டின் இறுதியில் 918 இற்கு அதிகரித்த வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கையில் 48 கிளைகள் 1990 இல் நிறுவப்பட்டவையாகும். இது 28 உள்நாட்டு வர்த்தக வங்கிக் கிளைகளையும், 2 வெளிநாட்டு வர்த்தக வங்கிக் கிளைகளையும், 11 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளையும், 7 தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளையும் உள்ளடக்கியிருந்தது. கிளையமைப்பில் ஏற்பட்ட இக்குறிப்பிடத்தக்க விரிவாக்கம் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமைகளைத் தொடர்ந்து நிதி நிறுவனங்களிடையே ஏற்பட்ட உயர்ந்த போட்டியினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

இலங்கை வங்கி இமடுவ, பிலியந்தலை, கன்வெல்ல, திக்வெல்ல, திகன ஆகிய இடங்களில் 5 கிளைகளைத் திறந்தது. 1990 இல் இலங்கை வங்கி அதன் மாங்குளம், கிண்ணியாக் கிளைகளையும் கொபேகன்ன வேளாண்மைப் பணி நிலையக் கிளையையும் மீளத் திறந்ததுடன் அதன் வலஸ்கல கிளையையும், பம்பகின்ன, கொடகொட, கிம்பிஸ்ஸா, வலிகமுவ ஆகிய இடங்களிலிருந்த வேளாண்மைப் பணிநிலையக் கிளைகளை மூடியது. அதேவேளை இலங்கை வங்கி கலகா, மதுரட்டை, குறுவிற்றை, அயகம ஆகிய இடங்களிலிருந்த நான்கு வேளாண்மைப் பணிநிலையக் கிளைகளைத் தரமுயர்த்தியது. அத்துடன் கிளை ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இலங்கை வங்கி இவ்வாண்டில் 7 கிளைகளையும், 5 வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளையும் மீள அமைத்தது. இதன் விளைவாக 1990 இறுதியில் இலங்கை வங்கியினது முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 247 இற்கு அதிகரித்தவேளையில் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை 38 இற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் மக்கள் வங்கி மூன்று கிளைகளை மாரவில, பாணந்துறை ஆகிய இடங்களிலும் அதன் கூட்டுக் கிளையைத் தலைமை அலுவலகத்திலும் திறந்ததுடன் அதன் கிண்ணியா, மகாஓயாக் கிளைகளையும் மீளத் திறந்தமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் தொழிற்பாட்டிலிருந்த கிளைகளின் மொத்த எண்ணிக்கை 306 இற்கு அதிகரித்தது.

அதேவேளை வரையறுக்கப்பட்ட செலான் வங்கி இவ்வாண்டில் இரத்தின புரி, கொள்ளுப்பிட்டி, மொரட்டுவ, கேகாலை, நுகேகொடை, கம்பகா, நீர் கொழும்பு, தெகிவளை, சிலாபம், காலி, கண்டி ஆகிய இடங்களில் 11 கிளை களைத் திறந்தது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, பொரளை, நுகேகொடை, கேகாலை ஆகிய இடங்களில் 3 புதிய கிளைகளை நிறுவியது. வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி பிலியந்தல, சிலாபம், பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் 3 புதிய கிளைகளையும், கட்டுநாயக்கா (வானூர்தி நிலை யத்தில்) கொடுப்பனவு அலுவலகமொன்றினையும் திறந்தது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி வத்தளையிலும், மாத்தறையிலும் இரு புதிய கிளைகளைத் திறந்தது. இதன் விளைவாக செலான் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, அட்டன் நசனல் வங்கி, சம்பத் வங்கி என்பனவற்றினது கிளைகளின் எண் ணிக்கை 1990 இறுதியில் முறையே 17 இற்கும், 19 இற்கும், 39 இற்கும், 13 இற்கும் விரிவடைந்தது. அதேவேளை 1990 இல் வரையறுக்கப்பட்ட கபீப் வங்கி அதன் நவம்மாவத்தைக் கிளையைத் திறந்தவேளையில் வரையறுக்கப் பட்ட ஸ்டான்டட் சார்ட்டட் வங்கி அதன் கொள்ளுப்பிட்டிக் கிளையைத் திறந்தது.

அட்டவணை 1.61

**வங்கிக் கிளைகளின் பரம்பல் 1988—1990**

| வகை | | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை | ... | 36 | 35 | 36 |
| 1. 1. வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை | ... | 25 | 24 | 24 |
| 1. 1. 1. உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை | ... | 06 | 06 | 06 |
| 1. 1. 2. வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை | ... | 19 | 18 | 18 |
| 1. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை (அ) | ... | 11 | 11 | 12 |
| 2. கிளைகளின் எண்ணிக்கை (ஆ) | ... | 844 | 870 | 918 |
| 2. 1. வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 700 | 712 | 742 |
| 2. 1. 1. உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (இ) | ... | 678 | 691 | 719 |
| 2. 1. 1. 1. வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 47 | 45 | 38 |
| 2. 1 2. வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 22 | 21 | 23 |
| 2. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை | | 80 | 89 | 100 |
| 2. 3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 64 | 69 | 76 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 1985இன் எண் 15 கொண்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

(ஆ) தலைமை அலுவலகங்கள் உட்பட

(இ) விரிவாக்க அலுவலகங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வெளிநாட்டுக் கிளைகள் உட்பட. ஆனால், தலைமையலுவலக கிளைகளின் விரிவாக்க அலுவலகத்தில் இயங்கும் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் நீங்கலாக.

ஆய்விற்குரிய ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி 7 புதிய கிளைகளை வெள்ளவத்தை, பிலியந்தலை, சுன்னாகம், சாவகச்சேரி, கம்பளை, கடவத்தை, மாளிகாவத்தை ஆகிய இடங்களில் திறந்தமையின் மூலம் 1990 இறுதியில் அதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 76 இற்கு உயர்வடைந்தது. அதே வேளை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 11 கிளைகளை நிறுவியதன் மூலம் ஆண்டின் இறுதியில் அவற்றின் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கையை 100 இற்கு அதிகரித்துக் கொண்டன. அத்துடன் அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதன் பணிகளை முன்னேற்றும் நோக்குடன் அதனது முதல் கிளை அலுவலகத்தைக் கண்டியில் திறந்தது.

**சிறப்புக் கடன் திட்டங்கள்**

இவ்வாண்டில் மக்கள் வங்கி அதன் சுய வேலைவாய்ப்புக் கடன் திட்டத்தினை ஆயுர்வேத வைத்தியர்கள், சட்ட அறிஞர்கள் போன்ற தொழில்சார்ந்தோரையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கிக் கொண்டதுடன் சிறு அளவு ஏற்றுமதியாளர்களுக்கு உற்பத்திப் பிரிவு, தொழிற்படு மூலதனம் என்பனவற்றை நிறுவுவதில் ஏற்படும் தொடக்கச் செலவுகளை ஈடுசெய்வதற்காகப் புதிய கடன் திட்டத்தினையும் அறிமுகப்படுத்தியது. வாடிக்கையாளர் பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு மக்கள் வங்கி ஒவ்வொரு மாதமும் வாடிக்கையாளர் நாளினை அறிமுகப்படுத்தியதுடன் வாடிக்கையாளருக்குத் தேவைப்படும் தகவல்களையும் வழங்கியது. மேலும் தேசிய அபிவிருத்தி வங்கி சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டத்தின்கீழ் பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இலங்கை வங்கி, மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழிலுக்காகச் செல்லும் இலங்கையர்களுக்கு உதவும் நோக்குடன் புதிய கடன் திட்டமொன்றினைத் தொடங்கியது. அதேவேளை மத்திய வங்கி, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்து பெற்ற இலகு கடன் வசதிகளைப் பயன்படுத்திப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கூடாக குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள மிகவும் பிற்பட்ட ஆட்களுக்குப் பிணைகளற்ற கொடுகடன்களை வழங்குவதற்கான புதிய திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. மத்திய வங்கி, சிறு வேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் திட்டத்தின்கீழ் வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, சிறு கைத்தொழில்கள் என்பவற்றில் நிபுணத்துவப் பணிகளை வழங்குகின்றதன் மூலம் சுயவேலைவாய்ப்புச் செயற்றிட்டத்திற்கு உதவும் திட்டமொன்றினையும் நடைமுறைப்படுத்தியது.

**வங்கித்தொழில் நேரங்களின் நீடிப்பு**

வாடிக்கையாளர் கேள்வியையும் அதிகரித்த போட்டியையும் கவனத்திற்கொண்டு பல வர்த்தக வங்கிகள் 1990 இல் தமது அலுவலக நேரங்களை நீடித்தன. இந்தோ சுயிஸ் வங்கி அதன் அலுவலக நேரத்தை பி.ப. 2.30 மணி வரை நீடித்துக் கொண்டது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி அதன் கூட்டு மற்றும் கொள்ளுப்பிட்டிக் கிளைகளின் அலுவலக நேரத்தை பி.ப. 8.00 மணி வரை நீடித்ததன்மூலம் இரவு வங்கித்தொழில் பணிகளை அறிமுகப்படுத்தியது. இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் தெரிந்தெடுக்கப்பட்ட முறையே 25 கிளைகளிலும், 15 கிளைகளிலும் அவற்றின் வங்கித்தொழில் நேரங்களை பி.ப. 4.00 மணிவரை நீடித்துக் கொண்டன. அதே வேளை இலங்கை வங்கி தெரிந்தெடுக்கப்பட்ட வலயங்களில் ''முதல் சனிக்கிழமைப்பணி''யினை அறிமுகப்படுத்தியது. இதன்படி, மத்திய, வட மத்திய, கிழக்கு வலையங்களிலுள்ள வங்கிக் கிளைகள்

ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமைகளிலும் நண்பகல் 12.00 மணிவரை கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும். கிறின்லேஸ் வங்கியும் அதன் முதன்மைக் கிளை அலுவல்களை மு.ப. 8.30 மணிக்குத் தொடங்கிய வேளையில் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி அதன் தெரிந்தெடுக்கப்பட்ட கிளைகளின் பணிகளை பி.ப. 3.00 மணிவரை நீடித்துக் கொண்டது.

### முகவர் வங்கித் தொழில்

ஆய்விற்குரிய காலப்பகுதியில் இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் 1988 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மக்கள் கடன் முன்னோடித் திட்டங்களின் கீழ் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்தன. இதன்படி இலங்கை வங்கி 1990 இல் 930 மக்கள் கடன் முன்னோடிகளை நியமித்ததன்மூலம் 1990 இறுதியில் இதன் மக்கள் கடன் முன்னோடிகளின் மொத்த எண்ணிக்கை 3,636 இற்கு உயர்வடைந்தது. இவ்வாண்டில் மக்கள் கடன் முன்னோடிகளுக்கு வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்களின் மொத்தப் பெறுமதி ரூ. 1,070 இலட்சமாகும். இதேவேளை மக்கள் வங்கி 2,373 மக்கள் கடன் முன்னோடிகளுக்கு நியமனம் வழங்கியதன்மூலம் அதன் மக்கள் கடன் முன்னோடிகளின் மொத்த எண்ணிக்கை 1990 இறுதியில் 6,701 இற்கு உயர்வடைந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் மக்கள் வங்கி மக்கள் கடன் முன்னோடிகளுக்கு ரூ. 970 இலட்சத்தினை வழங்கியதன் காரணமாக இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற தொகை 1990 இறுதியில் ரூ. 1,580 இலட்சத்திற்கு அதிகரித்தது.

வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி 59 சம்பத் தொழில் வழங்குநர்களை நியமித்ததன் மூலம் 1990 இறுதியில் சம்பத் தொழில் வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கை 105 இற்கு அதிகரித்தது. 1990 திசெம்பர் இறுதி வரை சம்பத் தொழில் வழங்குநர் திட்டத்தின்கீழ், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி ரூ. 200 இலட்சமாக விளங்கிய வேளையில் 1990 இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 111 இலட்சமாகக் காணப்பட்டது.

### பணிகளும் சேமிப்பு வசதிகளும்

நகரங்களுக்கிடையில், கொள்வனவாளர்கள் தாங்களாகவோ அல்லது பெயர் குறிப்பிட்ட பெறுநருக்கோ நிதிகளை மாற்றல் செய்யும் நோக்கத்திற்காகக் ''கண்டவுடன் கொடுப்பனவு செய்யும் கட்டளை'' என அழைக்கப்படும் கைமாற்றத் தகாத ஆவணமான புதிய பணமாற்றல் கருவியொன்றினை இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியது. மரபுவழியற்ற ஏற்றுமதிகளில் ஈடுபட்டிருக்கும் சிறு ஏற்றுமதியாளர்களுக்கு இலவச மதியுரைப்பணிகளை வழங்கும்பொருட்டு இலங்கை வங்கி வர்த்தக ஊக்குவிப்பு ஏற்றுமதி மதியுரைப் பணிகள் பிரிவொன்றினையும் திறந்துள்ளது. அத்துடன் மிகச் சிறப்பான பயண வசதிகளை, சிறப்பாக வெளிநாட்டவர்களுக்கு வழங்கும் பொருட்டு வரையறுக்கப்பட்ட எயர் லங்காவின் கூட்டுடன், வங்கி 'சீபேங்' பயண நிலையமொன்றினையும் நிறுவியது.

மக்கள் வங்கி ''மக்கள் வேளாண்மைப் பத்திரம்'' என அழைக்கப்படும் கொடுகடன் அட்டையை அறிமுகப்படுத்தியது. இதனை வைத்திருப்போர் பயிர்ச் செய்கைக் கடன்களைப் பெறவும் அவர்களின் சேமிப்புக் கணக்குகளின் மீது காசோலைகளை வரையவும் இது இயலச் செய்யும். வங்கி, வரையறுக்கப்பட்ட விசா இன்ரநசனலின் அங்கீகாரத்தின் கீழ் கொடுகடன் அட்டைகளாக பீபிள்ஸ் அட்டைகளை அறிமுகப்படுத்தியது. இதன்படி உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல் களுக்காக கிளாசிக் காட், கோல்ட் காட், பிசினஸ் காட் எனப்படும் அட்டை கள் அறிமுகப்படுத்தப்பட்டவேளையில் பன்னாட்டுக் கொடுக்கல் வாங்கல் களுக்காக இன்ரநசனல் காட் என்ற அட்டை பயன்படுத்தப்படவிருக்கிறது.

ஸ்டான்டட் சார்டட் வங்கி 'மணிலிங்' என அழைக்கப்படும் தன்னியக்க ரெலர் பொறி அட்டையை அறிமுகப்படுத்தியவேளையில் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி 'கற்' என அழைக்கப்படும் தன்னியக்க ரெலர் அட்டையை அறிமுகப்படுத்தியது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியும் வரை யறுக்கப்பட்ட செலான் வங்கியும் சிறார்களுக்காக முறையே ''சிறுவர் சேமிப்புக் கணக்குகள்'' மற்றும் ''சிறுவர் பாதுகாப்புக் கணக்குகள்'' எனப் பெயர் கொண்ட இரு புதிய வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தின. அரச ஈட்டு முதலீட்டு வங்கி ''சிறப்புச் சேமிப்புச் சான்றிதழ்கள்'' என அழைக்கப்படும் புதிய சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. இலங்கை மத்திய வங்கி இலங்கை அரசின் சார்பில் ''திறைசேரி வைப்புச் சான்றிதழ்'', ''தேசிய பாதுகாப்பு முறிகள்'' எனப் பெயர் கொண்ட இரு சேமிப்புக் கருவிகளை வழங்கியது.

### கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும்

சிறப்புக் கொடுகடன் திட்டங்களின் கீழ், கிராமிய அடிப்படையிலான பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட நிறுவன ரீதியான கொடுகடன் வசதிகள் *1990* இல் உயர்வடைந்தன. கிராமியத்துறைக்கான கொடுகடன் பாய்ச்சலை உயர்த்தும் நோக்குடன் *1990* இல் மத்திய வங்கி தீவு முழுவதற்கு மான சுயதொழில் வாய்ப்புக் கொடுகடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதுடன் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தில் பங்கேற் பதற்காகத் தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம் ஆகிய இரு அபிவிருத்திக் கடன் வழங்கல் நிறுவனங்களுக்கும் ஒப்புதல் களையும் வழங்கியது. பொருந்தத்தக்க வட்டி வீதங்களும், மீள் நிதியிடல்களின் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் வசதிகளின் அளவுகளும் நாணயக் கொள்கை மற்றும் வட்டி வீதங்களின் அபிவிருத்தியைக் கவனத்திற் கொண்டு *1990* இல் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

## புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்

முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட போக்கிற்கு மாறாக 1990 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடனின் மொத்த அளவு ரூ. 5,820 இலட்சமாக விளங்கி 106 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1989/90 பெரும் போகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 2,990 இலட்சமாக விளங்கி முன்னைய பெரும்போகத்தினைவிட 90 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டிய வேளையில் 1990 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 2,830 இலட்சமாக விளங்கி 1989 இன் சிறுபோகத்தினைவிட 125 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளன. கொடுகடன் வழங்கலில் ஏற்பட்ட முன்னேற்றமான பெரும் அதிகரிப்பிற்கு நாட்டின் பெரும்பாலான பகுதிகளின் பாதுகாப்பு நிலைமை முன்னேற்றம் கண்டமையைத் தொடர்ந்து பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடைந்தமையும், விரிவடைந்த வங்கித்தொழில் நடவடிக்கைகளுமே பெருமளவிற்குக் காரணமாகும்.

1990 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் நெற் செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களின் அளவு ரூ. 3,610 இலட்சமாக அமைந்து 1989 இனைவிட 74 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அத்தகைய கடன்கள் இவ்வாண்டில் பயிர்ச்செய்கை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 62 சதவீதத்திற்கு வகைகூறின. இதேபோன்று தரம் குறைந்த தானியங்கள், பருப்பு வகை, எண்ணெய் விதைகள், காய்கறி என்பனவற்றை உள்ளடக்கிய துணை உணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் முன்னைய ஆண்டினைவிட 191 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீது வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக மத்திய வங்கி தொடர்ந்தும் 50 சதவீத உத்தரவாதக் காப்பினை வழங்கியது. 1990 இறுதியில் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின்கீழ் இழப்பீடாக மத்திய வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூ. 358 இலட்சமாக விளங்கியது. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் 1986 இல் பயிர்ச்செய்கைக் கடன்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட மீள்நிதியிடல் மற்றும் கடன் வழங்கல் வீதங்கள் 1990 இன் நடுப்பகுதியில் மேல் நோக்கி உயர்த்தப்பட்டன. இதன்படி மீள் நிதியிடல் வீதம் ஆண்டிற்கு 1.5 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 4.5 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் கடன் வழங்கல் வீதம் ஆண்டிற்கு 9 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 12 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதன் மூலம் வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட இலாபம் ஆண்டிற்கு 7.5 சதவீதமாக இருந்தது.

வேளாண்மை உள்ளீடுகளின் அதிகரித்த விலைகளைக் கவனத்தில் கொண்டு, பயிர்ச்செய்கையை மீண்டும் சுறுசுறுப்படையச் செய்வதற்கு வேளாண்மையாளர்களுக்குப் போதுமான நிதியைக் கிடைக்கச் செய்வது அவசியம் என்பதனால் ஒவ்வொரு பயிருக்குமான கடன் தொகைகளின்படி நிதிகளின் அளவு தீர்மானிக்கப்பட்டு 1990 இல் மேல் நோக்கி உயர்த்தப்பட்டது.

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம்

1990 இல் தொழிற்பாட்டிலிருந்த 25 கொடுகடன் திட்டங்களின் கீழ் வேளாண்மை நோக்கங்களுக்காக, நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்களாக, பங்கேற்கும் வங்கிகளினால் ரூ. 1,620 இலட்சங் கொண்ட மொத்தத் தொகை வழங்கப்பட்டது. இது 1989 இன் தொடர்பான பெறுமதியினைவிட 160 சத வீதங் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. ரூ. 710 இலட்சங் கொண்ட உயர்ந்த அளவிலான மீள் நிதியிடல், இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தீவு முழுவதற்குமான சுயதொழில் வாய்ப்புக் கொடுகடன் திட்டத்தின்கீழ் பயன் படுத்தப்பட்டது.

அனைத்து நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் திட்டங்களின் கீழும் பொருந் தத்தக்க கடன் வழங்கல் வீதம் 1.5 சதவீதப் புள்ளியினால் ஆண்டிற்கு 14 சத வீதத்திற்கு அதிகரிக்கப்பட்டவேளையில் ஆய்விற்குரிய ஆண்டில் வங்கிகளுக்கான மீள் நிதியிடல் வீதம் 8.5 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதன்படி பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கான அனுமதிக்கப்பட்ட இலாபம் 4 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டமையின் மூலம் அவர்கள் கிராமியத்துறைக்கு அதிகரித்த கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

## கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் கொடுகடன் வசதிகள்*

1990 இல் தொழிற்பாட்டிலிருந்த கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண் ணிக்கை 282 ஆக மாற்றமின்றியிருந்தவேளையில், கூட்டுறவு கிராமிய வங்கி களினது சிறப்புக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 39 இனால் உறுதியாக அதிகரித்து மொத்தமாக 746 இனை அடைந்தது.

1990 இல் கூட்டுறவு கிராமிய வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூ. 4,350 இலட்சமாக விளங்கி 1989 இனைவிட 82 சத வீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே 1990 இலும் கூட்டுறவு வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் பெருமளவு தொகை வீடமைப்பு, மின்னூட்டல், நீர் வழங்கல் என்பனவற்றிற்கு வழங்கப்பட்டது. 1990 இல் வேளாண்மை நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 410 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 58 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

---

* 1971 இலிருந்து கிராமிய வங்கிகள் கூட்டுறவு கிராமிய வங்கிகளென அழைக்கப்படுகின்றன.

### வேளாண்மைக் காப்புறுதிச் சபை

கடந்த இரு ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக, வேளாண்மைக் காப்புறுதிச் சபையினால் காப்புறுதி செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 1989 இன் 37,000 எக்டேயர்களிலிருந்து 1990 இல் 40,000 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. இப்போக்கு இதே காலப் பகுதியில் பயிரிடப்பட்ட அதிகரித்த பரப்புடன் இசைவானதாகக் காணப்பட்டது. அதிகரித்த பரப்பளவு காப்புறுதி செய்யப்பட்டதன் விளைவாக வேளாண்மைக் காப்புறுதிச் சபையினால் சேகரிக்கப்பட்ட கட்டணத்தின் பெறுமதி 1989 இன் 94 இலட்சத்திலிருந்து 1990 இல் ரூ. 109 இலட்சத்திற்கு அதிகரித்து 16 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1990 இல் வேளாண்மைக் காப்புறுதிச் சபையினால் செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பெறுமதி 1989 இல் செலுத்தப்பட்ட ரூ. 107 இலட்சத்திற்கெதிராக ரூ. 88 இலட்சமாக விளங்கியது. இதன்படி 1990 இல் சேகரிக்கப்பட்ட கட்டணம் இவ்வாண்டில் செலுத்தப்பட்ட இழப்பீட்டினை ரூ. 21 இலட்சத்தினால் விஞ்சியுள்ளது.

### கிராமிய சேமிப்புக்களின் திரட்டல்

கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், வேளாண்மைப் பணிநிலையங்களிலுள்ள இலங்கை வங்கி துணை அலுவலகங்கள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றால் திரட்டப்பட்ட சேமிப்பு, நிலையான வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய கிராமிய சேமிப்புக்களின் வெளிநின்ற மொத்தப் பெறுமதி 1990 இல் ரூ. 35,220 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட ரூ. 5,120 இலட்சம் அல்லது 17 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வாண்டில் சேமிப்புத் திரட்டலின் முன்னேற்றத்திற்குச் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களின் மீதான கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள், கிராமப்புறங்களுக்குள் ஏற்பட்ட வங்கிக் கிளை விரிவாக்கம், புதிய சேமிப்புத் திட்டங்களின் அறிமுகம், கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் எழுச்சியுற்றமை, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் முன்னேற்றம் கண்ட பாதுகாப்பு நிலைமை என்பன உதவுக் காரணிகளாக இருந்தன. மொத்தச் சேமிப்புக்களில் ரூ. 24,970 இலட்சம் அல்லது 71 சதவீதத்தினைக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் வைத்திருந்தன. 1990 இறுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் வெளிநின்ற சேமிப்புக்கள் ரூ. 3,140 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் மட்டத்தினைவிட 78 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

### மத்திய வங்கித் தொழில்

மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1990 இறுதியில் ரூ. 774,620 இலட்சமாக விளங்கி 1989 இன் 74,390 இலட்சம் அல்லது 13 சதவீதங் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 146,920 இலட்சம் அல்லது 23 சதவீதங் கொண்ட மிகக் கூடுதலான அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

அட்டவணை 1.63

## வைப்புக்களும் முற்பணங்களும்—கிராமியத்துறை*

(ரூ. '000)

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள் | | வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1989 | 1990 | 1989 | 1990 | 1989 | 1990 | 1939 | 1990 |
| 1. மொத்தச் சேமிப்புகள் ... ... | 2,211,887 | 2,497,322 | 203,8o1 | 196,496 | 176,097 | 313,871 | 418,000 | 514,253 |
| 1.1 சேமிப்புகள் ... ... | 2,022,768 | 2,279,067 | 162,859 | 160,162 | 144,698 | 268,879 | வி.கி. | 422,133 |
| 1.2 சிறப்புச் சேமிப்புகள் ... ... | — | — | 15,561 | 12,690 | 9,545 | 8,379 | வி.கி. | 71,052 |
| 1.3 நிலையான வைப்புக்கள் ... | 189,119 | 218,255 | 25,441 | 23,644 | 21,854 | 36,613 | வி.கி. | 21,068 |
| 2. வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்** ... | 238,726 | 434,718 | 22,512 | 24,589 | 154,661 | 429,780 | 416,000 | 485,341 |
| 2.1 வேளாண்மை ... ... | 25,785 | 41,124 | 14,140 | 19,509 | 86,854 | 281,381 | வி.கி. | 131,254 |
| 2.2 விலங்கு வளர்ப்பு ... ... | 7,112 | 26,475 | 87 | 45 | 6,800 | 18,594 | வி.கி. | 20,523 |
| 2.3 மீன்பிடி ... ... | — | — | — | — | 4,006 | 5,348 | வி.கி. | — |
| 2.4 சிறு கைத்தொழில்கள் ... | 10,746 | 30,780 | 38 | 865 | 17,762 | 42,381 | வி.கி. | 69,734 |
| 2.5 வீடமைப்பு, மின்னூட்டல் நீர் வழங்கல் ... | 136,697 | 215,005 | 598 | 312 | — | — | வி.கி. | 152,753 |
| 2.6 செயற்றிட்ட/வர்த்தக ... | — | 16,406 | — | — | — | 49,290 | வி.கி. | 14,699 |
| 2.7 ஏனையவை ... ... | 58,386 | 104,928 | 7,649 | 3,858 | 39,239 | 32,786 | வி.கி. | 9o,378 |

* கிராமியப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் கிளைகள் மீதான நிலைமைகள் நீங்கலாக.

** இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி,

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
சிக்கன கொடுகடன், கூட்டுறவுச் சங்கங்கள்.

சொத்துக்கள் பக்கத்தில் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு (மொத்தம்) 1990 இல் ரூ. 64,360 இலட்சத்தினால் (65 சதவீதம்) கணிசமாக அதிகரித்தது. இது திறைசேரி உண்டியல்கள் உட்பட வெளிநாட்டிலுள்ள காசு மற்றும் நிலுவைகள், வெளிநாட்டு அரச மற்றும் அரசல்லாப் பிணைகள் என்பனவற்றில் முறையே ஏற்பட்ட ரூ. 40,160 இலட்சம், ரூ. 28,560 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களினதும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகளில் ஏற்பட்ட ரூ. 4,360 இலட்சங் கொண்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும்.

1989 இன் 2 சதவீதம் அல்லது ரூ. 7,610 இலட்சங் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் (ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் தவிர) 1990 இல் ரூ. 44,830 இலட்சம் அல்லது 11 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தன. அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் ரூ. 35,620 இலட்சத்தினால் (47 சதவீதம்) அதிகரித்தமைக்கு அனுமதிப் பங்கு உட்பட பன்னாட்டு நாணய நிதியத்திற்கான பொறுப்புக்கள் தொடர்பாக இடம்பெற்ற மீள் மதிப்பிடல் சீராக்கத்தினைத் தொடர்ந்து 1990 யூனில் ரூ. 30,550 இலட்சங் கொண்ட சிறப்புக் கடன்கள் அரசிற்கு வழங்கப்பட்டமையே முக்கிய காரணமாக இருந்தவேளையில் அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ரூ. 20,970 இலட்சத்தினால் (–7.2 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன. இதேவேளை 1990 இல் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான முற்பணங்கள் ரூ. 30,180 இலட்சத்தினால் (70 சதவீதம்) அதிகரித்தமைக்கு இவ்வாண்டில் ரூ. 20,450 இலட்சமாக விளங்கிய குறுங்கால மீள் நிதியிடல் கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சியே முக்கிய காரணமாக இருந்தது. இவ்வாண்டுக் காலத்தில் வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் 1989 இன் அதிகரிப்பான ரூ. 43,320 இலட்சத்துடன் (58 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ. 37,730 இலட்சத்தினால் (32 சதவீதம்) விரிவடைந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் மற்றும் வைப்புக்களை உள்ளடக்கிய நாணயப் பொறுப்புக்கள் 1990 இல் ரூ. 116,610 இலட்சத்தினால் வளர்ச்சியடைந்தன. வைப்புப் பொறுப்புக்களும், சுற்றோட்டத்திலுள்ள நாணயமும் முறையே ரூ. 88,870 இலட்சத்தினாலும், ரூ. 27,740 இலட்சத்தினாலும் அதிகரித்தன. வெளிநாட்டு அரசு, மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள், வர்த்தக வங்கிகள், அரசு, அரச முகவர் நிலையங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பனவற்றின் வைப்புக்கள் முறையே ரூ. 60,700 இலட்சத்தினாலும், ரூ. 18,610 இலட்சத்தினாலும், ரூ. 8,290 இலட்சத்தினாலும், ரூ. 1,520 இலட்சத்தினாலும் அதிகரித்தவேளையில் ஏனைய நிறுவனங்களின் வைப்புக்கள் ரூ. 250 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஆய்விற்குரிய ஆண்டில் வெளிநாட்டுலிருந்தான குறுங்காலக் கடன்பாடுகளின் பேரிலான மத்திய வங்கியின் வெளிநின்ற பொறுப்புக்கள் 1989 இன் ரூ. 24,010 இலட்சங் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுசையில் ரூ. 26,310 இலட்சத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. இதேவேளை மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் முன்னைய ஆண்டின் ரூ. 25,160 இலட்சங் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக ரூ. 51,610 இலட்சத்தினால் உயர்வடைந்தன.

**வட்டி வீதங்கள்**

சிறப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில், பணவீக்கத்தின் உயர் மட்டங்களினதும் உள்நாட்டுக் கொடுகடனின் விரைவான வளர்ச்சியினதும் பின்னணியில், வட்டி வீதங்களின் பொதுவான மட்டம் 1990 இல், முன்னைய ஆண்டினைப் போன்று தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டது. 1990 யூலையில் வங்கி வீதம் 14 இலிருந்து 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டவேளையில் ஏனைய சந்தைகளின் வட்டி வீதங்கள் சந்தைகளின் நிலைகளின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தன.

**குறுங்கால வீதங்கள்**

அரசினால் நிதியங்களுக்கு ஏற்பட்ட அதிகரித்த தேவையினைப் பிரதிபலிக்கும் வகையில் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் வட்டி வீதங்கள் அதிகரிக்கும் போக்கினை, சிறப்பாக 1990 இன் இரண்டாம் அரைப் பகுதியில் காட்டின இதற்கிசைவாக 1989 திசெம்பரின் ஆண்டிற்கு 18.10–19.10 சதவீத வீச்சிலிருந்து 1990 மேயில் ஆண்டிற்கு 15.4–16.9 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியுற்ற திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட ஆண்டுச் சராசரி வருவாய் 1990 இன் இரண்டாம் பகுதியில் அதிகரிக்கும் போக்கினைக் காட்டி ஆண்டு இறுதியில் ஆண்டிற்கு 17.4—18.4 சதவீத வீச்சாக விளங்கியது. இதேவேளையில் முதலாந்தரத் திறைசேரி உண்டியற் சந்தையில் வட்டி வீதங்களின் மாற்றங்களைத் தொடர்ந்து 1990 இல் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் கழிவு வீதமும் மீள் கழிவு வீதமும் மீளக் கணிக்கப்பட்டு ஆண்டு இறுதியில் அவை, முன்னைய ஆண்டின் இறுதியில் இச்சந்தையில் விளங்கிய வீதங்களுக்கு ஏறத்தாள சமனாக விளங்கின. எடுத்துக்காட்டாக, கழிவு வீதமும் மீள் கழிவு வீதமும் 1989 இறுதியில் முறையே 15.50 சதவீதம், 20.50 சதவீதம் என விளங்கி 1990 மேயில் முறையே 12.75 சதவீதத்திற்கும், 17.75 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. ஆனால் 1990 இன் இறுதியில் முன்னைய ஆண்டிறுதி வீதங்களுக்கு அதிகரித்தன. இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் கழிவு வீதத்தினதும், மீள் கழிவு வீதத்தினதும் வீச்சங்கள், முன்னைய ஆண்டில் முறையே ஆண்டிற்கு 12.50–15.75, 17.50—20.75 சதவீதம் என விளங்கிய வேளையில் 1990 இல் அவைகள் முறையே 12.75–15.75, 17.75–20.75 சதவீத வீச்சங்களைக் கொண்டிருந்தன.

இதற்கு மாறாக இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையேயான அழைப்புச் சந்தையின் வட்டி வீதங்கள் கணிசமானளவு தளம்பல்களைக் காட்டின. எடுத்துக்காட்டாக, இச்சந்தையின் வட்டி வீதங்கள் 1989 இன் இறுதிக் காலாண்டில் விளங்கிய 13–25 சதவீத வீச்சிலிருந்து 1990 இன் முதலாம் காலாண்டின் இறுதியில் ஆண்டிற்கு 13–15 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்து 1990 ஓகத்தில் இதன் அதிகூடிய வீச்சான ஆண்டிற்கு 19–30 சதவீத வீச்சினை அடைந்தன. 1990 இன் நாலாம் காலாண்டில் வீதங்கள் மீண்டும் ஆண்டிற்கு 14–19 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்தன.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி.

வர்த்தக வங்கிகளின் ஒரு ஆண்டு நிலையான வைப்புக்களுக்கான ஆகக் கூடிய, ஆகக் குறைந்த வீதங்கள், 1989 இறுதியின் 11.0–20.5 சதவீதத்திலிருந்து 1990 ஏப்பிரலில் 7.0–18.5 சதவீத வீச்சிற்கு வீழ்ச்சியடைந்தன. ஆனால் பின்னர் 1990 இறுதியில் 11.0—21.0 சதவீத வீச்சிற்கு அதிகரித்தன. இப்பரந்த வீச்சினுள், பல வர்த்தக வங்கிகள், தங்கள் ஒரு ஆண்டு நிலையான வைப்புக்களின் வீதங்களை ஆய்விற்குரிய ஆண்டுக் காலத்தில் 11—15 சதவீத வீச்சிலிருந்து 14–17 சதவீத வீச்சிற்கு உயர்த்தின. வர்த்தக வங்கிகளுடனான போட்டித் தன்மையைப் பேணுவதற்காகத் தேசிய சேமிப்பு வங்கியானது, அதன் சேமிப்புக்கள், நிலையான வைப்புக்கள் மீதான வீதங்களை 1990 யூலையில் ஆண்டிற்கு 2 சதவீதப் புள்ளியளவினால் மேல் நோக்கித் திருத்தியது.

ஆய்விற்குரிய காலத்தில் வைப்புச் சான்றிதழ்களுக்கு வர்த்தக வங்கிகளினாதி வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 7–21.7 சதவீத வீச்சில் விளங்கின. வைப்புச் சான்றிதழ்களுக்கு நிலக் கூட்டு நிலையங்களால் வழங்கப்பட்ட வட்டி வீதங்களும் இவ்வாண்டுக் காலத்தில் ஏறத்தாள நிலையாக ஆண்டிற்கு 12—22 சதவீத வீச்சில் காணப்பட்டன. இதே வேளையில் நிதிக் கூட்டுநிலையங்களின் 24 மாதங்களுக்குக் குறைந்ததும் 24 மாதங்களுக்குக் கூடியதுமான முதிர்ச்சிக் காலத்தையுடைய வைப்புக்களுக்கான வைப்பு வீதங்கள் மீதான உச்ச வரம்புகள் முறையே ஆண்டிற்கு 21 சதவீதத்திலும், 24 சதவீதத்திலும் மாறாது விளங்கின.

1990 ஏப்பிறலில் இலங்கை மத்திய வங்கியானது வேளாண்மைக் கொடுகடன் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் பொருந்தும் வட்டி வீதங்களை மேல் நோக்கித் திருத்தியது. இதற்கேற்ப இலங்கை மத்திய வங்கியின் மீள்நிதியிடும் வீதம் ஆண்டிற்கு 1.5 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்ட வேளையில் கொடுகடன் நிறுவனங்களின் இலாப அளவு மாற்றப்படாது 7.5 சதவீதத்திலேயே விளங்கச் செய்து கடன்பாட்டாளர்களுக்குப் பொருந்தக்கூடிய ஆகக்கூடிய வீதம் 9 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

வைப்பு வீதங்களினால் பதிவு செய்யப்பட்ட போக்குகளைத் தொடர்ந்து வாராந்த அடிப்படையில் மத்திய வங்கியினால் கணிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் 1990 இன் முதலரைப் பகுதியில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டியதெனினும் பின்னரைப் பகுதியில் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருந்தது. சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் அதன் ஆகக் குறைந்த ஆண்டிற்குரிய வீதமான 17 சதவீதத்தினை யூனில் பதிவு செய்ததுடன் மிக உயர்ந்த ஆண்டிற்குரிய வீதமான 18.6 சதவீத நிலையினை திசெம்பரில் அடைந்தது.

**நீண்ட கால வீதங்கள்**

1990 இல் 8 அரச பிணைகளின் தொடர்சள் வழங்கப்பட்டன. இப்பிணைகள் 4 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தையும் ஆண்டிற்கு 13 சதவீத வட்டி வீதத்தையும் கொண்டிருந்தன. இவை 1989 இல் வழங்கப்பட்ட 5–6 ஆண்டுகளைக் கொண்ட பிணைகளின் மீதான 11-12 சதவீத ஆண்டு வட்டி வீதங்களுடன் ஒப்பிடத்தக்கனவாகும். 1990 மேயில் மத்திய வங்கி, இலங்கை அரசின் சார்பில் பொது மக்களுக்குத் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களை வழங்குவது பற்றி அறிவித்தது. 1990 மேயில் திறைசேரி வைப்புச் சான்றிதழ் மீதான வருவாய் வீதம் ஆண்டிற்கு 14.6–16.5 சதவீத வீச்சிலிருந்து ஒத்தோபரில் ஆண்டிற்கு 17.1–19.0 சதவீத வீச்சிற்கு அதிகரித்து 1990 இன் இறுதி இரண்டு மாதங்களிலும் இதே மட்டத்தில் காணப்பட்டது. அதேவேளை தேசிய பாதுகாப்புச் செலவினத்தினை ஈடுசெய்வதற்கான நிதியினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மத்திய வங்கி ஆண்டிற்கு 15 சதவீத வட்டியையும் 3 ஆண்டுகள் முதிர்ச்சிக் காலத்தையும் கொண்ட தேசிய பாதுகாப்பு முறிகளின் இரண்டு தொடர்களை வழங்கியது.

1990 ஏப்பிறலில் மத்திய வங்கி நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழான கடன்களுக்குப் பொருந்தத்தக்க வட்டி வீதங்களைத் திருத்தியமைத்தது. வகை I (தொடர்பான அமைச்சுக்களினால் ஒப்புதலளிக்கப்பட்டு வரி விடுப்புக்களைக் கொண்டிருக்கும் வேளாண்மை மற்றும் கடற்றொழில் மேம்பாடு அல்லது அபிவிருத்தி) வகை II (ஏற்றுமதிகளின் மேம்பாடு அல்லது அபிவிருத்தி) என்பனவற்றின் கீழ் கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலாபம் உயர்த்தப்பட்டவேளையில் இவ்வகைகளுக்குப் பொருந்தத்தக்க மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வீதங்கள் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டன. வகை 1 இன் கீழ் கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலாபம் 4 சதவீதத்திலிருந்து 7 சதவீதப் புள்ளிகளுக்கு அதிகரிக்கப்பட்டவேளையில் மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வீதம் ஆண்டிற்கு 7.5 சதவீதத்திலிருந்து 7.0 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. வகை II இனைப் பொறுத்தவரையில் கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலாபங்கள் 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதப் புள்ளிகளுக்கு அதிகரிக்கப்பட்டவேளையில் மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வீதங்கள் 2 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டது. இதன்படி வகை 1 இன் கீழான கடன்களுக்குப் பொருந்தத்தக்க ஆகக் குறைந்த வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 11.5 சதவீதத்திலிருந்து 14.0 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டவேளையில் வகை II இன் கீழான கடன்களுக்குப் பொருந்தத்தக்க ஆகக் குறைந்த வீதங்கள் முன்னைய ஆண்டின் மட்டங்களில் அதாவது ரூ. 50 இலட்சத்திற்குக் குறைவான கடன்களுக்கு 9 சதவீதமாகவும் ரூ. 50 இலட்சத்திற்கு மேற்பட்ட கடன்களுக்கு 10 சதவீதமாகவும் விளங்கின.

முன்னைய ஆண்டினைப் போன்றே தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கல் வீதங்கள் தொடர்ந்தும் சந்தை வட்டி வீதங்களுடன் இணைக்கப்பட்ட தாக இருந்தன. இதன்படி, சிறிய நடுத்தரக் கைத்தொழில்கள் செயற்றிட்டம் III இன் கீழ் ஒவ்வொரு 6 மாதத்திற்குமான மீள் நிதியிடல் வீதங்கள் முன்னைய 6 மாத காலப் பகுதிக்கான வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதத்திலிருந்து 6 சதவீதப் புள்ளிகளைக் கழிப்பதன் மூலம் தீர்மானிக்கப்பட்டது. எனினும் கடன் வழங்கும் நிறுவனங்கள் அவற்றின் தொழிற்பாட்டுச் செலவுகளினதும் செயற்றிட்ட இடர்ப்பாடுகளினதும் அடிப்படை யில் தமது சொந்த இலாபங்களைத் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. அதேவேளை 1990 இறுதியில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் சிறிய நடுத்தரக் கைத்தொழில் வாடிக்கையாளர்களுக்கான கடன் வழங்கல் வீதம் 1988 இன் 14.5 சதவீத ஆண்டு வட்டி வீதத்துடனும் 1989 இன் 16.5 சதவீத ஆண்டு வட்டி வீதத்துடனும் ஒப்பிடுகையில் ஆண்டிற்கு 17.5 சதவீதமாக இருந்தது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினால் கருவிகளுக்கு நிதியிடல், வர்த்தகக் கட்டடங்களின் கட்டடவாக்கத்திற்கான கடன்கள், தொழிற் படு மூலதனம், நிரப்பு நிதி என்பனவற்றிற்கு விதிக்கப்பட்ட கடன் வழங்கல் வீதங்கள் 1989 இன் ஆண்டிற்கான 15.0–18.0 சதவீத வீச்சுக்களுடன் ஒப்பிடுகையில் 1990 இல் ஆண்டிற்கு 17.5–22.0 சதவீத வீச்சுக்கிடையில் காணப்பட்டன. தேசிய சேமிப்பு வங்கியும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியும் வீடமைப்புக் கடன்களை ஆண்டிற்கு 18 சதவீதத்திற்கும், 22 சதவீதத்திற்கு மிடையில் வழங்கின. ஒப்பிடுகையில் 1989 இல் இவ்வீதங்கள் ஆண்டிற்கு 13 சதவீதத்திற்கும், 20 சதவீதத்திற்குமிடையில் காணப்பட்டன.

**நாணயக் கொள்கை**

1990 இல் உள்நாட்டு அதேபோன்று வெளிநாட்டுக் காரணிகளின் காரண மாகத் திரவத்தன்மையில் ஏற்பட்ட வலுவான விரிவாக்கப் பின்னணியில், அதி காரிகள், 1989 இல் பின்பற்றிய கட்டுப்பாடான நாணயக் கொள்கை நிலையையே தொடரவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருந்தனர். ஆண்டு முழுவதும் நிலவிய தொடர்ச்சியான உயர்ந்த பணவீக்கத் தாக்கங்களின் மூலம் கட்டுப்பாடான நாணயக் கொள்கையின் அவசியம் மேலும் வலுவடைந்தது. இதன் காரணமாக 1989 இறுதியில் காணப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக பின்வரும் கொள்கை வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. முதலாவதாக வங்கி வீதம் 1 சதவீதப் புள்ளியால் 1990 யூலையில் 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. இரண்டாவதாக பல்வேறு வசதிகளைப் பொறுத்த வரையிலான மத்திய வங்கி யின் மீள் நிதியிடலுக்குப் பொருந்தத்தக்க வட்டி வீதங்கள் இவ்வாண்டில் மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

அண்மைய போக்கினைத் தொடர்ந்து 1990 இலும் நாணயக் கொள்கையின் முக்கிய உந்துவிசையாகத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளே விளங்கின. இதன் படி ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கி அதன் உள்நாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சி வீதத்தினை மிகைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்திலுள்ள திரவ நிலைமையினதும் மிதமான வீதத்தினை ஏற்படுத்தும் நோக்குடன் அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைத் திறைசேரி உண்டியல்களின் விற்பனை மூலம் தீவிரப்படுத்தியது. அதேவேளை பணவீக்கச் சூழ்நிலைதிருப்திகரமான மட்டத்திற்கு முன்னேற்றமடையாததினால் 1989 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொடுகடன் மீதான பகுதியளவிலான உச்ச எல்லை, இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகள் மீதான கொடுகடன் பத்திரத்திற்கெதிராகப் பேணப்பட வேண்டிய 100 சதவீத வைப்புப் போன்ற சந்தை சாரா கொடுகடன் கட்டுப்பாட்டுக் கொள்கை வழிமுறைகள் இடைநிறுத்தப்படாமல் குறுங்காலச் சீராக்க வழிமுறைகளாக 1990 இலும் தொடர்ந்தன. எனினும் வளர்ச்சி வேகத்தினைப் பேணும் பொருட்டு, வங்கி பொருளாதாரத்தின் முன்னுரிமை மற்றும் உற்பத்தித்துறைகளுக்கு மீள்நிதியிடல் வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கவேண்டியிருந்தது. வேறுபட்ட திட்டங்களின் கீழ் வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற மீள்நிதியிடல் 1990 இல் ரூ. 27,590 இலட்சத்தினால் விரிவடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 70,700 இலட்சத்தினை அடைந்தது.

ஆய்விற்குரிய ஆண்டில் திறைசேரி உண்டியல்கள் மீதான வருவாய்கள் சந்தை நிலைமைகளினால் தீர்மானிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இதன் படி 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான வருவாய் 1989 இறுதியில் 18.1 சதவீதத்திலிருந்து 1990 யூன் இறுதியில் 15.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே போக்கினைப் பின்பற்றி இக்காலப் பகுதியில் 6 மாத, 12 மாதத் திறைசேரி உண்டியல்கள் மீதான வருவாய் 18.2 சதவீதத்திலிருந்தும் 19.1 சதவீதத்திலிருந்தும் முறையே 15.7 சதவீதத்திற்கும் 16.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. எனினும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் வருவாய்கள் மீண்டுமொருமுறை அதிகரித்தன. எடுத்துக்காட்டாக 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான வருவாய் 17.4 சதவீதத்திற்கும் 6 மாத, 12 மாத உண்டியல்கள் மீதான வருவாய் முறையே 18.0 சதவீதத்திற்கும், 18.4 சதவீதத்திற்கும் அதிகரித்தன.

கடந்த காலங்களைப் போன்றே, மத்திய வங்கி இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு தற்காலிக மேலதிக நிதியங்களுக்குக் குறிப்பாக நிதி நிறுவனங்களுக்கு முதலீட்டுவழிகளை வழங்கியது. இவ்வாண்டில் இச்சந்தையில் திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனை ரூ. 672,000 இலட்சமாகவும் கொள்வனவுகள் ரூ. 211,000 இலட்சமாகவும் விளங்கி மொத்தச் சுழல்வினை ரூ. 883,000 இலட்சங்களாக்கியது.

முதலாந்தர, இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதன் விளைவாக வங்கியல்லாத்துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1989 இறுதியின் ரூ. 155,000 இலட்சத்திலிருந்து 1990 இறுதியில் ரூ. 229,000 இலட்சத்திற்கு மேலும் அதிகரித்தன. இதன் விளைவாக வெளிநின்ற மொத்தத்தில் வங்கியல்லாத்துறையினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 31 சதவீதத்திலிருந்து 37 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை 1990 இல் திறைசேரி உண்டியல்களின் மொத்த வழங்கல் ரூ. 104,000 இலட்சத்தினால் (ஏட்டுப் பெறுமதி)

அதிகரித்துக் காணப்பட்டபோதும் மொத்தத்தில் மத்திய வங்கி உடைமைகளின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 57 சதவீதத்திலிருந்து 44 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை திறந்த சந்தைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் தாக்கத்தினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின்கீழ் கிடைக்கத்தக்கதான மூலவளங்கள் 1990 யூனில் ரூ. 6,250 இலட்சத்தினால் உயர்த்தப்பட்டதுடன் ஆண்டின் முடிவில் ரூ. 32,500 இலட்சங்களை அடையும் விதத்தில் 1990 ஒத்தோபரில் ரூ. 7,500 இலட்சத்தினால் மேலும் உயர்த்தப்பட்டன. இவ்வதிகரிப்புக்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழான நிதியங்களின் பயன்பாடு 1989 இறுதியின் ரூ. 15,720 இலட்சத்திலிருந்து 1990 இறுதியில் ரூ. 25,450 இலட்சத்திற்கு அதிகரித்தது. அத்துடன் நிதிக் கூட்டுநிலையங்களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடலின் அளவு 1990 இறுதியில் ரூ. 6,840 இலட்சமாக அமைந்து இவ்வாண்டில் ரூ. 2,380 இலட்சங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அதேவேளை ஏற்றுமதி மீள் நிதியிடல் திட்டங்கள் (வகைகள் I உம், II உம்) மற்றும் வேளாண்மைக் கொடுகடன் திட்டம் என்பனவற்றின் கீழான வெளிநின்ற மட்டங்கள் முறையே ரூ. 1,150 இலட்சத்தினாலும், ரூ. 1,750 இலட்சத்தினாலும் அதிகரித்தன. இறக்குமதிக்காகவும் இன்றியமையாத உணவுப் பண்டங்களின் தாங்கிருப்புக்களைப் பேணுவதற்குமாகக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு இவ்வாண்டில் வழங்கப்பட்ட ரூ. 15,000 இலட்சங்கொண்டதொரு சிறப்புக் குறுங்கால மீள் நிதியிடல் வசதியே 1990 இல் பொதுவான மீள் நிதியிடல் வசதிகள் விரிவடைந்தமைக்கான முக்கிய உதவு காரணியாக இருந்தது.